**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 2017–2018 ஆம் நிதியாண்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குறையுடையோருக்கான பராமரிப்பு இல்லங்களிலுள்ள உள்ளுறைவாளர்களுக்கு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் உதிரி பாகங்களை பொருத்திடும் புதிய பயிற்சி வழங்கிட ரூ.13.00.000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.63

நாள்:07–09–2017
ஹேவிளம்பி, ஆவணி 22.
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:-

1. மானியக் கோரிக்கை எண்.52. 2017–18 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் அறிவிப்பு நாள் 24.06.2017.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்(மு.கூ.பொ) ந.க.எண்.2857/ மா.தி.ந.2.1/2017. நாள் 01.07.2017.

---

**<u>ஆணை:</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களால் 24.06.2017 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஏனையவற்றுடன் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

"தற்போது மாநிலம் முழுவதும் 14 வயதுக்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு இல்லங்கள் 42 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் தங்கியுள்ள 1680 பயனாளிகளுக்கு ஊதுபத்தி தயாரித்தல், சாக்குகட்டி தயாரித்தல் போன்ற சாதாரண தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் விதமாகவும் இவர்களுடைய மூளை மற்றும் தசைகளுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பு ஏற்படுத்தும் வகையிலும், நவீன முறையில் பயிற்சி வழங்குவதற்காக தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் உதிரி பாகங்களை பொருத்தும் புதிய பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கு தேவையான பயிற்சி உபகரணங்களை ஒவ்வொரு இல்லத்திற்கும் ரூ.30,000/– வீதம் 42 இல்லங்களுக்கு வழங்கவும், தொழிற்பயிற்சி ஆசிரியர்களுக்கு தலைமை பயிற்சி அளிக்கவும் ஆக மொத்தம் ரூ.13.00 இலட்சம் செலவு ஆகும்.

எனவே மனவளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு இல்லங்களில் இத்தகைய தொழிற்பயிற்சி மேற்கொள்வதற்கான பயிற்சி உபகரணங்கள் வாங்கவும் மற்றும் பயிற்சி அளிக்கவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.13.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவில், தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சிக் குன்றியோருக்கான பராமரிப்பு இல்லங்களிலுள்ள உள்ளுறைவாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடும் விதமாகவும் மனவளர்ச்சிக் குறையுடையோர்களின் மூளை மற்றும் தசைகளுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பு திறனை உருவாக்கிடும் வகையிலும், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் உதிரி பாகங்களை பொருத்திடும் புதிய பயிற்சி வழங்கிடுவதற்கான கீழ்காணும் உபகரணங்களை கொள்முதல் செய்திட இல்லம் ஒன்றுக்கு ரூ.30,000/– வீதம் 42 இல்லங்களுக்கு செலவினமாக ரூ.12,60,000/– மற்றும் 42 தொழிற்பயிற்றுனர்களுக்கு ஒரு நாள் பயிற்சி பட்டறை வழங்கிட செலவினமாக ரூ.40,000/– என ஆக மொத்தம் ரூ.13.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## Training Aids per Kit for one centre

| Sl.No. | Description | Unit |
|---|---|---|
| 1. | Aluminum peg board (set with bin) | 1pair |
| 2. | Printed circuit board<br>(set with 2 bin) | 1No |
| 3. | Tweezers and Washer | 1No |
| 4. | Tweezers and Rivet | 1 No |
| 5. | Nail Board (set with bin) | 1 pair |
| 6. | Sequence operation board | 1set |
| 7. | Bolt & Nut Assembly Board set | 1 No |
| 8. | Terminal Board | 1 No |
| 9. | Screa Assembly Board (set with 2 bin) | 1 No |
| 10. | Wick & Winding | 1No |
| 11. | Tactile Discrimination<br>a) Rivet & Screws<br>b) Steel Balls<br>c) Nut & Washers | |
| 12. | Wing nut assembly | 1 No |
| 13. | Training Manual | 1 No |

3. மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும்விதமாக மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2017–2018 ஆம் நிதியாண்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குறையுடையோருக்கான பராமரிப்பு இல்லங்களிலுள்ள உள்ளுறைவாளர்களுக்கு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் உதிரி பாகங்களை பொருத்திடும் புதிய பயிற்சி வழங்கிடுவதற்கான உபகரணங்களை கொள்முதல் செய்திட இல்லம் ஒன்றுக்கு ரூ.30,000/– வீதம் 42 இல்லங்களுக்கு செலவினமாக ரூ.12,60,000/–ம் மற்றும் 42 தொழிற்பயிற்றுனர்களுக்கு ஒரு நாள் பயிற்சி பட்டறை வழங்கிட செலவினமாக ரூ.40,000/–ம் என ஆக மொத்தம் ரூ.13.00 இலட்சம் (ரூபாய் பதின்மூன்று இலட்சம்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன் படி திறந்த ஒப்பந்த புள்ளி மூலம் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02. சமூக நலன் 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – CO மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு திட்டம் –

| கணக்கு தலைப்பு | தொகை |
|---|---|
| 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்<br>[ த.தொ.கு 2235–02–101–CO–1917 ] | ரூ.12,60,000/– |
| 72 பயிற்சி<br>[த.தொ.கு 2235–02–101–CO–7206 ] | ரூ.40,000/– |
| மொத்தம் | ரூ.13,00,000/– |

6. மேலே பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.13,00,000/– 2017–18 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2017–18 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2017–18 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித்(ச.ந./வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.42308/நிதி(சந)/2017, நாள்28.08.2017–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1318 (ஆயிரத்து மூன்னூற்று பதினெட்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.

நகல்:
நிதித் (சமூக நலம்/வ.செ.பொது I &II) துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்( மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உ திரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/9/17
பிரிவு அலுவலர்
13/9/17